**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.56/2025 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு. இராமன் |
| Husband/Father Name | கன்னியப்பன் |
| Village /Area | பருத்திபுத்தூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 61 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.09.2025.

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் கிராமம் பருத்திபுத்தூரில் கோவில் திருவிழா நடந்தது. அன்றிரவு எங்கள் கிராமத்தில் சண்டை நடந்ததாக கூறினார்கள். இது சம்பந்தமாக மறுநாள் காலையில் அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் சம்பவ தினத்தன்று இரவு சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னை விசாரித்தார்கள். மறுநாள் விழா கமிட்டி நபர்களை போலீசார் பருத்திபுத்தூரில் இருந்து காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். அதன் பிறகு நாங்கள் பிரச்சனையை சரிசெய்து தருவதாக விழா குழுவினார் கூறினோம். சம்பந்த பட்ட நபர்களை அழைத்து வருவதாக கூறி விழா குழுவினரை அழைத்து வந்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு சம்பந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி கையொப்பத்தை நான் கமிட்டி தலைவர் மற்றும் உறுப்பினர்களை அழைத்து வருவதற்காக காவல் நிலைத்தில் வைத்து போடப்பட்டது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் கையொப்பம் இட்டதாக கூறியிருந்தாதால் அது தவறு.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.24 16:08:56 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.